World Christian Fellowship
www.wcflondon.com
wcflondon@gmail.com

# மல்கியா

## வரலாற்று பின்னணி:

**எல்லா வருடமும் கிறிஸ்துவிற்கு முன்னாள் தோராயமாக,**

**2090** - ஆபிரகாம் தேவனால் அழைக்கப்படுகிறார்

1877 - யாக்கோபு எகித்திற்கு வருகிறார்

1806 → யோசேப்பு எகிப்தில் மரித்தார்

1527 → மோசே பிறந்தார்

1487 → மோசே எகிப்திலிருந்து தப்பி ஓடுகிறார்

1447 → யாத்திராகமம் தொடங்குகிறது

**1400** → கானானின் வெற்றி முடிந்தது

1043 → சவுல் ராஜாவானார்

1011 → சவுலும் யோனத்தானும் கொல்லப்பட்டார்கள்; தாவீது யூதாவின் ராஜாவானார்

**1004** → தாவீது எல்லா இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிறார்

966 → சாலமன் எருசலேமில் ஆலயத்தைக் கட்டத் தொடங்குகிறார்

**931** → ரெகோபெயாம் இஸ்ரவேலின் ராஜாவானான் . யூதா மற்றும் யெரொபெயாம் கிளர்ச்சி செய்கிறார்கள் ; வடக்கில் ஒரு எதிர்ப்பு ராஜ்யம் அமைகிறது

764 → ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

755 → ஓசியா தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

739 → உசியா இறந்தார்; ஏசாயா தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

**721** → இஸ்ரேலின் பத்து கோத்திரங்கள் கொண்ட வடக்கு ராஜ்யம் சிறைபிடிக்கப்படுகிறது

648 → நினிவேயின் வீழ்ச்சியை நாகூம் கணித்துள்ளார்

634 → செப்பனியா தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

627 → எரேமியா தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

619 → ஆபக்குக் தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

612 → நினிவே விழுகிறது

**606** → இரண்டு கோத்திரங்கள் கொண்ட தெற்கு ராஜ்யம் சிறைபிடிக்கப்படுகிறது

605 → நேபுகாத்நேச்சார் பாபிலோனின் ராஜாவானார்

593 → எசேக்கியேல் தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

586 → பாபிலோனியர்கள் எருசலேமையும் ஆலயத்தையும் அழிக்கிறார்கள்

520 → சகரியா தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

520 → ஆகாய் தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

520 → ஜெருசலேம் ஆலயத்தின் கட்டுமானம் மீண்டும் தொடங்கியது

**516** → ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது

478 → எஸ்தர் பெர்சியாவின் ராணியாகிறார்

458 → எஸ்ரா யூதர்களில் ஒரு சிறிய குழுவை மீண்டும் பாலஸ்தீனத்திற்கு அழைத்துச் செல்கிறார்

445 → நெகேமியா யூதர்களில் ஒரு சிறிய குழுவை மீண்டும் பாலஸ்தீனத்திற்கு அழைத்துச் செல்கிறார்

443 → நெகேமியாவும் எஸ்ராவும் யூதர்களுக்கு வேதவசனங்களைப் படித்து காண்பித்தார்கள்

**436** → மல்கியா தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார்

336 - மகா அலெக்சாண்டர் கிரேக்கத்தின் ராஜாவானார்

**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# மல்கியா

**Historical background**

All the years are approximate: Before Christ (B.C.)

**2090** → Abraham called by God

1877 → Jacob arrives in Egypt

1806 → Joseph dies in Egypt

1527 → Moses born

1487 → Moses flees Egypt

1447 → The Exodus begins

**1400** → Conquest of Canaan completed

1043 → Saul becomes king

1011 → Saul and Jonathan slain; David becomes king of Judah

**1004** → David becomes king over all Israel

966 → Solomon begins to build the Temple in Jerusalem

**931** → Rehoboam becomes king of Israel & Judah and Jeroboam rebels; sets up a rival kingdom in the north

764 → Amos begins to prophesy

755 → Hosea begins to prophesy

739 → Uzziah dies; Isaiah begins to prophesy

**721** → The Northern Kingdom of ten tribes of Israel goes into captivity

648 → Nahum predicts the fall of Nineveh

634 → Zephaniah begins to prophesy

627 → Jeremiah begins to prophesy

619 → Habakkuk begins to prophesy

612 → Nineveh falls

**606** → The Southern Kingdom of two tribes goes into captivity

605 → Nebuchadnezzar becomes king of Babylon

593 → Ezekiel begins to prophesy

586 → The Babylonians destroy Jerusalem and the Temple

520 → Zechariah begins to prophesy

520 → Haggai begins to prophesy

520 → Construction of the Jerusalem Temple resumed

**516** → The Temple completed

478 → Esther becomes queen of Persia

458 → Ezra takes a small contingent of Jews back to Palestine

445 → Nehemiah takes a small contingent of Jews back to Palestine

443 → Nehemiah and Ezra read the Scriptures to the Jews

**436** → Malachi begins to prophesy

336 Alexander the Great becomes king of Greece

மேலே உள்ள சரித்திரத்தின் படி இஸ்ரவேல் தேசம் உருவாகி அது எப்படி முன்னேறிச் சென்றது என்பதை அறிகிறோம்.

தேவன் எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவந்து வாக்குதத்தம் பண்ணப்பட்ட காணான் தேசத்துக்கு கொண்டு சென்றார்.

ஆவிக்குரிய நமக்கு பாவத்தில் மரித்திருந்த நம்மை எகிப்து என்கிற உலக நடைமுறையிலிருந்து பரலோகராஜ்ஜியம் கொண்டு செல்லுகிறார்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியிலே சுகமாய் பாதுகாப்புடன் வாழும்போது இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமலும் அவருடைய பாதைகளில் நடக்கமறுத்தார்கள். ஆனாலும் தேவன் தன்னுடைய தீர்க்கதரிசிகளையும் தன்னுடைய தூதர்களையும் திரும்பத்திரும்ப அனுப்பினாலும் அவர்களோ செவிகொடுக்க மறுத்துவிட்டார்கள்.

நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்ட போதிலும் நம்மில் பலர் நம்முடைய அன்றாட வாழ்வில் நடக்கும் தொடர்ச்சியான காரியங்களில் கட்டுண்டு தேவன் அழைக்கபட்டதின் அழைப்புக்கேற்ப நடப்பதில்லை. தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாயும் தம்முடைய பரிசுத்த ஆவியின்மூலமாயும் நம்மோடு பேசிக்கொண்டுதான் இருக்கிறார்.

இஸ்ரவேல் தேசமக்கள் தங்கள் கவனத்தை தேவன் தம்வசமாய் திருப்புவதற்காக பஞ்சத்தையும் ஏழ்மையையும் அனுப்பினார். ஆனால் அவர்களோ மறுத்துவிட்டார்கள். இறுதியாக எதிரிகளை அனுப்பி அவர்களை சிறைப்பிடித்துக்கொண்டு போகப்பண்ணினார் .வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியையும் தங்களுக்குண்டான எல்லாவற்றையும் இழந்து எதிரிகளின் நாட்டில் அடிமைகளானார்கள்.தேவன் தனக்கென்று வைராக்கியம் கொண்ட மக்களை தெரிந்தெடுத்து அவர்கள் மூலமாய் மீண்டும் அவர்களுடைய சொந்த நாட்டிக்கு கொண்டு சென்றார்.எங்கு தொடங்கினார்களோ அங்கு மீண்டும் வந்து சேர்ந்தார்கள்.

ரட்சிக்கப்பட்ட நாம் தேவனைவிட்டு விலகிச் செல்லும்போது நாம் நியமிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்காக கிருபையைவிட்டு விலகி ஒரு பிரயோசனமில்லாத வாழ்க்கைக்குச் சென்றுவிடுகிறோம். தேவன் மீண்டும் நம்மை உயிர்ப்பித்து தம்மிடத்தில் சேத்துக்கொள்கிறார். நம்மில் எத்தனை

பேர் நன்றி உணர்வுடன் அவரோடு தினசரி தொடர்புகொண்டு வாழ்கிறோம்?

மல்கியா தீர்க்கதரிசி இந்தக் காலகட்டத்தில்தான் இஸ்ரவேல்தேச மக்களை நோக்கி நீங்கள் உங்களுடைய தேசத்திற்கு வந்துவிட்டீர்கள் ஆலயம் கட்டப்பட்டுவிட்டது நகரத்தை சுற்றி கோட்டை எழுப்பபட்டுவிட்டது ஆனாலும் நீங்கள் தேவனுடைய நாமத்தைக் கணப்படுத்தாதது ஏன்?

இந்த மொத்தப் புத்தகமும் கேள்வி பதில் போல் எழுதப்பட்டுள்ளது.தேவன் மக்களை நோக்கி நான் இந்தக்காரியத்தைச் செய்தேன் என்று சொன்னால் மக்கள் உடனடியாக நீங்கள் எங்களுக்கு என்ன செய்தீர்கள் என்று மறுகேள்வி கேட்கிறார்கள். இதில் ஏழு கேள்விகள் மக்கள் தேவனிடம் கேட்கிறார்கள்.

ஆவைகள்யாவன

1. **எங்களை எப்படிச் சிநேகித்தீர் ?** (1:2)
2. **உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம்**?(1:6)
3. '**உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம்**?(1:7)
4. **எதினாலே உம்மை வருத்தப்படுத்துகிறோம்**?" (2:17)
5. **'நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும்** ?' (3:7)
6. **'எதிலே உம்மை வஞ்சித்தோம்**?' (3:8)
7. **'உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம்** ?' (3:13)

மல்கியா என்பதன் அர்த்தம் என்னுடைய செய்தியாளர்.இது ஒருவேளை அவருடைய பெயராக இருக்கவாய்ப்பில்லை. ஒரு தீர்க்கதரிசி தன்னுடைய பெயரை மறைத்து தேவனுடைய செய்தியை மக்களுக்கு தேவனுடைய செய்தியை வெளிப்படுத்தியிருக்களாம்.

இந்த சிறிய புஸ்தகத்தில் ஏழுமுறை சாபம் குறிப்பிடப்பட்டுள்ளது.ஆங்கில வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டின் கடைசிப் புஸ்தகத்தில் கடைசி வார்த்தை சாபம் என முடிகிறது.

**மல்கியா** 4:6, *And he will turn The hearts of the fathers to the children, And the hearts of the children to their fathers, Lest I come and strike the earth with a curse*."

***நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.***

மல்கியாவும் நெகேமியாவும் சிலகாரியங்களைக் குறித்து ஒரேமாதிரி எழுதுகிறார்கள்.

ஆசாரியர்களின் கவனக்குறைவு (மல்கியா 1:6 நெகேமியா 13:4-9)

தசமபாகத்தின் கவளக்குறைவு (மல்கியா 3:7-12 நெகேமியா 13:4-9)

கலப்புத் திருமணம் வேறு தேசத்தாருடன் (மல்கியா 2:10-16 நெகேமியா 13:23-28)

இந்தப் புஸ்தகத்தை ஏன் நாம் படிக்கவேண்டும்?

1. அன்பும் இரக்கமுமான தேவனின் உண்மையும் நாம் தொடர்ந்து பாவம் செய்தாலும் நம்மை மன்னிக்கக்கூடிய அவரைப் புகழ்வதற்கு.
2. நம்முடைய வெளிப்பிரகாரமான மதச்சடங்காசாரங்களையல்லாமல் உள்ளான நீதியை நோக்கி நடப்பதற்கு.
3. நாம் ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிப்பதினால் அவருடைய மகிமை நம்மூலமாய் உலகுக்கு வெளிப்படும்.
4. மணவாட்டி மணவாளனின் வருகைக்காய் கார்த்திருந்து தேவனுக்காய் வாழ்வதற்கு.
5. தேவனால் உருவாக்கப்பட்ட திருமணம் என்ற உடன்படிக்கை கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு பரிசுத்தமாவதற்கு.
6. தேவனுக்குச் சேவை செய்வதில் உண்மையும் மிகுந்த நம்பிக்கையோடும் இருப்பதற்கு.
7. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து மிகுந்த நம்பிக்கையோடும் எதிர்பாப்போடும் இருப்பதற்கு.

இந்த ஏழு கேள்விகளையும் நாம் ஆராய்வதற்கு முன்பு கீழேயுள்ள கருத்தை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மல்கியா 1:6 நான் உங்கள் பிதா (அப்பா)

இஸ்ரவேல் மக்கள் பழைய உடன்படிக்கையில் வாழ்ந்த போதிலும் அவர்களை தேவன் தம்முடைய பிள்ளைகளாய் நடத்தினார்.

இப்போது இந்த ஏழு கேள்விகளை நாம் விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

## 1. எங்களை எப்படிச் சிநேகித்தீர் ? (1:2)

தேவன் மக்களை நோக்கி நான் உங்களை சிநேகித்தேன். மோர்கன் என்பவர் இதை மெழியாக்கம் செய்கிற போது ‘‘நான் உங்களை சிநேகித்தேன், நான் உங்களைச் சிநேகிக்கிறேன், நான் உங்களை சிநேகிப்பேன்’’

வசனம் 1:2-5, ***நான் உங்களைச் சிநேகித்தேனென்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு நீங்கள்: எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்; கர்த்தர் சொல்லுகிறார்: ஏசா யாக்கோபுக்குச் சகோதரனல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். 3. ஏசாவையோ நான் வெறுத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன். 4. ஏதோமியர்: நாம் எளிமைப்பட்டோம்: ஆனாலும் பாழானவைகளைத் திரும்பக் கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள்; அதற்குக் கர்த்தர்: அவர்கள் கட்டுவார்கள், நான் இடிப்பேன். அவர்கள் துன்மார்க்கத்தின் எல்லையென்றும், கர்த்தர் என்றைக்கும் சினம்வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுவார்கள் என்கிறார். 5. இதை உங்கள் கண்கள் காணும். அப்பொழுது நீங்கள்: கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவக்கி மகிமைப்படுத்தப்படுவார் என்பீர்கள்.***

இதைக்குறித்த வேதவசனப்பகுதி ஆதியாகமம் 25:23-34 வரை வாசிக்கவும்.

இந்தக் கடிதத்தை தேவன் எப்படித் தொடங்குகிறார் என்பதைப் பாருங்கள். நான் உங்களை சிநேகித்தேன். தகப்பன் தன்னுடைய பிள்ளைகளைப் பார்த்து சிநேகத்தில்தான் தொடங்குகிறார். கடவுள் என்பது ஒரு கோட்பாடோ அல்லது கர்த்தத்துவமோ அல்லது ஒரு எண்ணமோ அல்லது ஒரு சக்தியோ அல்ல இது நாம் தொடர்பு கொள்ளக்கூடிய உறவு.அதும் ஒரு தகப்பனாக.

மதம் ஒருவகையான கோட்பாடுகளுடன் நீங்கள் சில கிரியைகளைச்செய்து அதன் மூலமாய் வாழ்வது. கிறிஸ்தவமோ உறவினால் ஏட்படக்கூடிய ஒருபந்தம்.தேவனுடைய அன்பை

உணர்ந்ததினால் அன்பின்மூலமாய் கிரியை செய்கிறோம் மாறாக அவருடைய அன்பை பெறுவதற்காக கிரியை செய்வதில்லை.

நான் ஏதோ பெரியவன் என்பதற்காக ஆண்டவர் தெரிந்துகோள்ளவில்லை. அவர் பெரியவர் என்பதினால். ஒரு அனாதை ஆச்சிரமத்தில் உள்ள குழந்தைகளில் சிலர் நல்லவர்களாய்,சிலர் அன்பானவர்களாய், சிலர் கெட்டவர்களாய், மற்றும் சிலர் மறுதலிப்பவர்களாய் இருந்தாலும் தேவன் எல்லோரையும் ஏற்றுக்கொண்டு நேசிக்கக்கூடியவராய் இருக்கிறார்.

இஸ்ரவேல் தேச மக்கள் பாபிலோனியர்களால் சிறைபிடிக்கப்பட்டு இருந்தபோது தேவன் அவர்களை மீட்டெடுத்து சொந்த ஊரில் வைத்து ஆலயம் கட்டி ஊரைச்சுற்றி கோட்டை எழுப்பட்டபோதிலும் அவர்கள் இருதயமோ தூரமாய் இருந்தது. தேவனுக்கு எப்படி இருந்திருக்கும் என்றால் ஒரு குழந்தை தன்னுடைய தகப்பனில் மடியில் உட்காந்து கொண்டு அவர் கன்னத்தில் அறைவது போல்.

தேவன் ஏசாவைக்குறித்து 5காரியங்களைச் சொல்லுகிறார்.

1. தேவன் அவர்களுடைய செழுமையை எதிர்த்து அவர்களுக்கு எதிராக நியாயந்தீர்ப்பேன். **அவனுடைய மலைகளைப் பாழும்**இ **அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன்**.
2. தேவன் அவர்களுக்கு எதிராக தொடர்ந்து காரியங்களைச் செய்வார்.வசனம் 4: "**ஏதோமியர்**: **நாம் எளிமைப்பட்டோம்**: **ஆனாலும் பாழானவைகளைத் திரும்பக் கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள்**; **அதற்குக் கர்த்தர்**: **அவர்கள் கட்டுவார்கள்**, **நான் இடிப்பேன்.**"
3. தேவன் ஏசாவை ஒரு துன்மார்க்கர்களின் தேசமாய் மாற்றுவார்.வசனம்4b: "**அவர்கள் துன்மார்க்கத்தின் எல்லையென்றும்**, .
4. தேவன் அவர்கள்மேல் எப்போதும் கோபமாய் இருப்பார்.வசனம், V4b, **கர்த்தர் என்றைக்கும் சினம்வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுவார்கள் என்கிறார்**
5. தேவனுடைய நோக்கம் யாக்கோபைத் தெரிந்தெடுத்ததின் மூலமாய ஏசா நியாயந் தீர்க்கப்படுதல் வெளிப்படுகிறது. வசனம் 5: ***“இதை உங்கள் கண்கள் காணும்*. *அப்பொழுது***

*நீங்கள்: கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவக்கி மகிமைப்படுத்தப்படுவார் என்பீர்கள்.!'*

நாம் எப்படி இதற்கு உடன்படுவது?

**யோவான்** 17:23, ***ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.***

**யோவான்** 15:9, ***பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.***

**1 யோவான்** 4:19, ***அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.***

**யோவான்** 1:12, ***அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.***

Romans 8:14-15, ***மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.*** *15.* ***அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.***

நாம் தேவனுடைய அன்பை அநுபவத்தில் உணர்ந்து கொள்ள வேண்டும்.ரோமர் 5:5இல் சொன்னதுபோல பரிசுத்தஆவியானவர் மூலமாய் தேவனுடைய ஆன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்படவேண்டும் என்று ஜெபிப்போமாக.

## 2. உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம்? (1:6)

## 3. ‘‘உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம்?’ (1:7)

தேவனாகிய கர்த்தர் நான் உங்களுடைய பிதாவும் எஜமானனும் என்றால் எனக்குரிய கனம் எங்கே என்று கேட்கிறார்?

நாம் தேவன் நம்முடைய பிதாவாகவும் நம்முடைய கர்த்தராகவும் சமனிலை கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இந்த நாட்களில் நம் தேவன் நம்முடைய பிதா என்கிற போதனைகளை மாத்திரம் கேட்பதினால் பலருக்கு தேவனைக்குறித்த பயபக்தி இல்லாமல் போய்விட்டது. ஆனால் சிலரோ தேவனுடைய பயத்தைக்குறித:து அதிகமாய் போதிப்பதினால் தேவனுடைய அன்புக்கு வெகுதூரமாய் நின்றுகொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நாம் தேவனைக்குறித்த பயபக்தியும் அவர் அன்பான தகப்பன் என்பதைக்குறித்தும் சரியான சமநிலை நமக்குத் தேவை.

இப்பொழுது நீங்கள் உங்களிடம் இந்தக் கேள்விகளைக் கேளுங்கள்?

உங்களுடைய எல்லா நடபடிக்கைகளும் தேவனை கணப்படுத்துகிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

உங்களுடைய எல்லா நடபடிக்கைகளும் தேவனை கணப்படுத்துகிறது என்று தேவன் நினைக்கின்றாரா?

காரணம் என்னவென்றால் இஸ்ரவேல்தேச மக்கள் தாங்கள் தங்களுடைய வாழ்வல் தேவனை கணப்படுத்துகிறோம் என்று அவரோடு வாதிட்டார்கள்.ஆனால் தேவனோ அவர்கள் அவரை கணப்படுத்தவில்லை என்று கூறுகிறார்.அவர்கள் எந்தவிதத்தில் கணப்படுத்தவில்லை?அவனா ஆராதிப்பதில்.ஒருவனா நீங்கள் மதித்தால் நீங்கள் அவரை கணப்படுத்துவீர்கள். தேவனை கணப்படுத்தினால் உங்களுடைய ஆராதனை உண்மையாய் இருக்கும். வீண் ஆராதனை அல்ல.

தேவன் முதலாவது பொக்கிஷம் அல்லது பணத்தில்தான் ஆரம்பிக்கிறார்.

1. குருடான பலி
2. கால் ஊணமான நசல்கொண்ட பலி
3. எல்லாக்காரியங்களையும் கூலிக்காகச் செய்வது.

**மத்தேயு** 6:21, ***உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.***

தேவன் உங்கள் இருதயத்தின்மேல் பிரியமாய் இருக்கிறார். உங்கள் பணத்தின் மேல் அல்ல!

தேவனுக்குப் படைக்கப்படுகிற பலிகளை உங்களுடைய அதிபதிகளுக்குச் செலுத்தமுடியுமா? மக்களுக்குப் பயப்படுகிற ஜனம் தேவனுக்கு பயப்படாமல் இருப்பது ஆச்சரியம் அல்லவா?

ஒரு குடும்பத்தில் நன்றாகப் படிக்காத ஒரு பிள்ளையை போதகர் படிப்புக்கு அனுப்புவது ஆனால் இதே பெற்றோர் நன்றாகப் படிக்கும் பிள்ளையை ஒரு மருத்துவராகவோ அல்லது ஒரு பொறியியல் ஆகவோ அல்லது ஒரு சட்ட நிபுணர் ஆகவோ படிக்கவைப்பது இதற்குச் சமம்.சமுதாய வேலையில் 30வருடங்களுக்கு மேலாக பணம் சம்பாதிப்பதற்காக வேலை பார்த்துவிட்டு ஓய்வு பெற்றபின் நான் கர்த்தருக்காக வேலை செய்வது எந்த வகையில் சரி.தங்களுடைய வாழ்வில் நல்ல முக்கியமான நேரத்தை பணம் சம்பாதிப்பதற்காக செலவழித்துவிட்டு சாகப்போவதற்கு முன்பு கர்த்தருக்கு வேலை செய்ய வருவது கர்த்தரை கணப்படுத்தும் காரியமா?

ஒரு உதாரணம் நீங்கள் என்னை உங்களுடைய இல்லத்திற்கு தேனீர் அருந்த அழைத்து இருக்கிறீர்கள். நான் வந்தவுடன் தேனீர் தயார்படுத்திவிட்டு என்முன்னால் அமர்ந்து எனக்குக் கொடுக்காமல் உரையாடிக்கொண்டிருக்கிறீர்கள். நீண்ட நேரத்துக்குபின்பு நீங்கள் பருகிய கோப்பையில் சிறிதளவு மீதம் இருக்கையில் எனக்கதைக் கொடுத்து என்னைச் சிறிதளவு பருகச்சொன்னால் அது கணத்துக்குரிய காரியமா? நாம் எந்தவொரு மனிதருக்கும் செய்யமாட்டோம்.இப்படி இருக்க நாம் நம்முடைய அனுதின வாழ்க்கையில் நம்முடை நேரம், பணம், மற்றவைகளில் தேவனுக்கு ஏன் இப்படிச்செய்கிறோம்?

புல வருடங்களுக்குமுன்பு ஒரு சபையில் மூப்பராக இருந்தபோது அந்த சபைக்கு ஒரு கணனி தேவையிருந்தது.சபையிலுள்ள ஒரு விசுவாசி தேவனுக்காக தன்னுடைய கணனியை கொடுக்க முன்வந்தார்.கணனியை நாங்கள் பார்த்தபோது அதிச்சியடைந்தோம் .காரணம் அது வேலை செய்யவில்லை மற்றும் அது குப்பையில் போடுவதற்கு மாத்திரமே லாயக்கு. இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவர் தனது கணனியைக் கொடுத்ததன் மூலமாய் தேவனுக்கு சேவை செய்ததாய் நினைத்து தேவனை அற்பப்படுத்திவிட்டார்.

இந்த ஆசாரியர்கள் தேவனுக்கு கெட்டுப்போன ஆகாரங்களையும், அழுகிய பழங்களையும் காணிக்கையாய் படைத்தனர்.இதை அவர்களால் ஒரு அதிபதிக்குச் செய்யமுடியாது.ஆனால் தேவனுக்குச் செய்தார்கள்.

தேவனை நேசிப்பதும் அவருக்குக் கொடுப்பதும் கணவன் மணைவி உறவைப்போன்றது. ஆனால் இன்றைக்கு அந்த பந்தம் விவாகரத்தானது போல வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

**மல்கியா 1:10, உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான்; என் பலிபீடத்தின்மேல் அக்கினியைக் கூலியில்லாமல் கொளுத்தவுமாட்டீர்கள், <u>உங்கள்பேரில் எனக்குப் பிரியமில்லையென்று</u> சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; <u>உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல</u>**

முதலாவது தேவன் ஒருவரை அங்கிகரிக்க வேண்டும்.அதன் பின்புதான் அவருடைய காணிக்கையை அங்கிகரிப்பார்.

ஆதியாகமம் 4:4-5, ***ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். <u>ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்.</u> 5. <u>காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை</u>. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது.***

பலருக்கு தேவன் ஏன் காயினுடைய காணிக்கையை அங்கிகரிக்கவில்லை என்ற சந்தேகமுண்டு. காயினை தேவன் அங்கிகரிக்காதினால் தான் அவனுடைய காணிக்கையை அங்கிகரிக்கவில்லை என்பது வார்த்தையில் தெளிவாயிருக்கிறது.

மல்கியா புஸ்தகத்தில் ஆலயத்தின் கதவுகளைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் மற்றும் பலிபீடத்தில் அக்கினி கொழுத்துவதற்கும் கூலியில்லாமல் செய்யமாட்டார்கள். இப்படியாக கூலிக்காக வேலைசெய்வதில் கர்த்தர் பிரியப்படவில்லை என்கிறார். இந்த நாட்களில் அநேக ஆலயங்களில் அதிக ஊழியங்கள் செயல்படுகின்றன.மல்கியா காலத்தில் சொல்லப்பட்டது போல சம்பளத்துக்காக நடைபெறுகின்றன.

**மல்கியா 1:14, <u>தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்துகொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன்</u>; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

ஆண்டவருக்காய் நல்ல பலியை நேர்ந்துவிட்டு கடைசியில் பலி செலுத்தும்போது நல்ல கடா இருந்தும் கெட்டுப்போனதை ஆண்டவருக்குச் செலுத்தினால் அவர்கள்மேல் ஆசீர்வாதம் அல்ல சாபம் வந்துசேரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இவ்வளவு தவறான காரியம் நடக்கும்போது அதன் மத்தியில் தேவனுடைய இரக்கத்தைப் பாருங்கள்.வசனம் 9, ***இப்போதும் தேவனுடைய சமுகத்தை நோக்கிக் கெஞ்சுங்கள்; அப்பொழுது நம்மேல் இரங்குவார்; இது உங்களாலே வந்த காரியம், அவர் உங்களை அங்கீகரிப்பாரோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்.***

இந்த மொத்தப் பகுதியும் இரண்டு முக்கியமான கேள்விகளான தேவனுக்குரிய கணம் மற்றும் அவருடைய நாமம் என்பதைக் கொண்டதாயிருக்கிறது. அவர்களோ தேவனைக் கணப்படுத்துகிறோம் என்று வீண் ஆராதனை செய்தார்கள்.உங்களுடைய வாழ்வு எப்படியிருக்கிறது. நீங்கள் உண்மையாய் தேவனை ஆராதிக்கிறீர்களா?

உங்களுடைய வாழ்வில் அவரை கணப்படுத்துகிறீர்களா?

அவருடைய நாமத்தை கணப்படுதுகிறீர்களா?

நீங்களே உங்களை சோதித்துப்பாருங்கள்.

## 4. எதினாலே உம்மை வருத்தப்படுத்துகிறோம்?" (2:17)

கெட்டவர்கள் ஏன் செழிப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள்?

நீதிமான்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்?

நல்லவர்களுக்கு ஏன் கெட்டவைகள் நடக்கிறது?

ஏதாவது ஒரு தவறான காரியம் நடந்தால் மேற்கூறிய கேள்விகள் நம்மிடம் கேட்கப்படுவது சகஜம்.

தேவன் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு எப்படிப் பதில் அழிப்பார். சில நொடிகள் சிந்தியுங்கள் ஏன் என்றால் அப்போதுதான் நீங்கள் தேவனுடைய கோணத்திலிருந்து நமது வாழ்வில் நடப்பவைகளைக் காணமுடியும்.

தேவன் ஆசாரியர்களை இந்த இரண்டாம் அதிகாரத்தில் தொடர்ந்து கடிந்து கொள்கிறார்.அவர்கள் தங்களது நடபடிக்கைகளை மாற்றிக்கொள்ளாவிட்டால் அவர்களது ஆசீர்வாதம் சாபமாய் மாறிவிடும். அது இப்பொதே சாபமாய் மாறி வந்துகொண்டிருக்கிறது. காரணம் அவர்களுடைய இருதயத்தின் கடிணத்தை முன்பே தேவன் உணர்ந்ததினால்.அவர்களுடைய சந்ததியின் மேலும் அவர்களுடைய முகங்களின் மேலும் சானியைப் பூசுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பலிகொடுக்கப்பட்ட மிருகங்களின் சானி பாளையத்துக்கு புறம்பே எரிக்கப்படவேண்டும். (யாத் 29:14). இங்கே தேவன் உங்களுடைய மூக்கின்மேலே தடவுவேன் என்று சொல்லுகிறார். இதன் அர்த்தம் ஆசாரியர்கள் தேவனுடைய பிரசனத்திலிருந்து துரத்தப்படுவார்கள்.

லேவியர்கள் இஸ்ரவேல்தேச மக்களுக்கு ஒரு முன்மாதிரியாய் இருக்கவேண்டுமென்பதற்காய் ஒரு உடனபடிக்கை பண்ணினார் (மல்2:5-7).

- பயத்துடன்கூடிய மரியாதை: **அவன் என் நாமத்துக்குப் பயந்தும் இருந்தான்**.
- தேவனுடைய வார்த்தையைத் தெரிந்திருத்தல்: **சத்தியவேதம் அவன் வாயிலிருந்தது**
- கர்த்தருடைய குணாதியங்கள்: **என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்**

- தேவனுடையவார்த்தையைப் பாதுகாத்தல்:
  **ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும் வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே**

**மல்கியா** 2:8-9,

ஒரு ஆசாரியன் தேவனுடைய வார்த்தையை ஞானத்தோடும், பயபக்தியுடனும் மற்றும் கீழ்படிதலினாலும் கற்று காத்திருக்கவேண்டும். ஆனால் இவர்களோ அதை தாங்களும் செய்யாமல் தூரச் சென்று மற்றவர்களுக்கு ஒரு தடையாக மாறிவிட்டார்கள். மல்கியா நாட்களில் ஆசாரியர்கள் தேவனுடைய உயர்ந்த திட்டத்தில்லிருந்து தவறிவிட்டதால் அவர்கள் மக்கள் மத்தியிலும் மரியாதை இழந்துபோனார்கள்.

தேவன் இஸ்ரவேல் மக்களோடு தந்தை மகன் என்ற உறவை திருமண உடன் படிக்கையோடு ஒப்பிடுகிறார்கள்.ஆசாரியர்களோ அந்நிய தேசத்தில் உள்ள பெண்களோடு திருமணம் செய்து அந்த திருமண பந்தத்தை அசிங்கப்படுத்தினார்கள். திருமணம் என்பது தேவன் தனக்கு முன்பாக பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றார்.

திருமணம் என்பது மணிதனின் எண்ணமல்ல.அது தேவனின் திட்டம்.அதற்காகத்தான் தேவன் முதலாவது திருமணத்தை உருவாக்கி அதை ஆசீர்வதித்து அதன்மூலமாய் எல்லாத் திருமணம் நடைபெறுவதற்கு ஒரு முன் மாதிரியை ஏற்படுத்தினார் (ஆதி 2:20-25).

தேவன் திரமணத்தை நேசிப்பதன் காரணம்:-

- அது நமக்கம் தேவனக்கும் உள்ள உறவின் வெளிப்பாட்டை மற்றவர்களுக்குக் காட்டுகிறது.
- சமுதாயத்திற்கு ஒரு நன்மையாக அடைகிறது.
- திருமணம் என்பது ஆண், பெண்,குழந்தைகள் என எல்லோருடைய தேவைகளையும் பூர்த்திசெய்கிறது.
- எல்லாவற்றைக்காட்டிலும் நம்மை கிறிஸ்துவைப்போல் மாற்றுவதற்கு இது உதவுகிறது.

ஆசாரியர்கள் வேறு தேசத்தைச் சேர்ந்த பெண்களை திருமணம் செய்வது தேவனுக்கு அருவருப்பானது என்று தெரியும். பல காரியங்களை அவர்கள் முன்பே அறிந்திருந்தாலும்,அதை அவர்கள் தொடர்ந்து செய்து தேவனை வெறுப்படையச் செய்தார்கள்.

- மோவாப் தேசப் பெண்களை மணமுடித்ததால் சாபம் வரப்பண்ணினார்கள்.(எண் 25:1-18)

- சாலமோன் ராஜா அந்நிய தேசப் பெண்களை திருமணம் செய்ததால் அவர்கள் அவனுடைய இருதயத்தை அந்நிய தேவர்கள் பக்கம் திசைதிருப்பினார்கள்.(1ராஜா 11:1-10)

- ஆகாப் ஜெசிபன் என்கிற அந்நிய தேசப் பெண்ணை திருமணம் செய்ததால் நம்பமுடியாத அளவிற்கு இஸ்ரவேல ஜனங்களை அடிமைத்தனத்திற்குக் கொண்டு சென்றது.(1ராஜா 16:29-33)

- அப்போஸ்தலராகிய பவுல் ஒரு விசுவாசி. அவ்விசுவாசியை திருமணம் முடிக்கக்கூடாது என்று கட்டளையிடுகிறார்கள்.(2கொரி 6:11-18)

ஆசாரியர்கள் அந்நிய தேசப் பெண்களைத் திருமணம் முடித்து அந்நிய தேவர்களை ஆராதிப்பது மட்டுமல்லாமல் திருமணத்தையே வெகு கேவலமாக எண்ணினார்கள்.

ஆசாரியரின் மணைவிமார்கள் தேவனுடைய ஆலயத்துக்கு வந்து பரிசுத்தத் ஸ்தலத்தை தங்களுடைய கண்ணீரினால் நிரப்பும் அளவிற்கு தாங்கள் அவர்களை கொடுமையாக நடத்தினார்கள். அது மாத்திரமல்ல அந்ந மணைவிமார்களை வாலிப நாட்கள் கடக்கும் மட்டும்வைத்துவிட்டு பின்பு அவர்களை துரத்திவிட்டு மீண்டுமாய் வாலிபப் பெண்களை திருமணம் செய்தார்கள்.

தேவன் ஆண்,பெண் என்று இருபால் மக்களைப் படைக்காமல் ஒருவரையே படைத்தார். தேவன் திருமணத்தை மிகவும் கனப்படுத்துகிறார். நாமும் நமது திருமணத்தைக் கனப்படுத்தி தேவனுக்கு முன்பாக உத்தமமாக நடப்போமாக!

## 5. ‘‘நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும் ?’ (3:7)

தேவன் மீண்டும் திரும்ப தன்னுடைய செய்தியாளர்களைத் தெடர்ந்து ஒருவரின் பின் ஒருவராக அனுப்பி தன்னுடைய வார்த்தைகளை மக்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்தார். ஆனால் மக்கள் கேட்கவில்லை.பின்பு தன்னிடமிருந்து இன்னுமொரு செய்தியாளரை நான் அனுப்புவேன். அவர் வந்து மேசியா வருவதற்கான வழிகளை ஆயத்தப்படுத்துவார்.அவர் தேவனுடைய செய்தியாளர் என்று எலலோரும் அறிந்து கொள்வார்கள்.

யோவான் ஸ்நானகன் வந்து மேசியா வரப்போகிறார்,நான் அவருக்கான வழியை ஆயத்தப்படுத்த வந்திருக்கிறேன் என்ற செய்தியோடு தன் ஊழியத்தைத் தொடங்கினார்.

**மத்தேயு** 3:3, ***கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே.***

**மத்தேயு** 11:10, ***அதெப்படியெனில், இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய் வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.***

தேவன் மல்கியா மூலம் சொன்ன ஒரு செய்தி தேவனாகிய கர்த்தர் யாருக்கும் எதிர்பாராவண்ணம் அவர் திடீர்ரென தேவனுடைய ஆலயத்தில் தோண்றுவார். அவரை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் யார்? இப்போது நமக்கு சரித்திரம் தெரிந்ததினால் அறிந்துகொள்வது என்னவென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தோண்றினார். ஆனால் அவருடைய வருகைக்காக தங்களுடைய மொத்த வாழ்வையும் அர்பணித்துக்கொண்ட வேதபாரகர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்துவிட்டார்கள். மாத்திரமல்ல அவர்களே அவரை சிலுவை மரணத்தில் கொண்றுபோட்டார்கள்.

முதலாவதாக நாம் யோவான் ஸ்நானகனுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுவோம். மனந்திரும்புதல் இல்லாமல் விசுவாம் கூடாது. பாவத்திலிருந்து மனந்திரும்பதல், தேவன்

பெயரில் விசுவாசம் இந்த இரண்டும் இருந்தால்தான் நாம் இரட்சிப்புக்குள் செல்ல இயலும். இந்த நாட்களில் அநேகர் வெறுமனே இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் மாத்திரம் வைத்திருத்திருப்பதனால் தான் அவர்களுடைய அன்றாட வாழ்வில் அவர்களால் தேவனுடைய வார்த்தையின்படி நல்ல கனி கொடுக்கமுடியாமல் வாழ்கின்றனர்.

**மல்கியா** 3: 2, ***ஆனாலும் அவர் வரும் நாளை சகிப்பவன் யார்?*** ***அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்?*** ***அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார்.***

தேவன் இரண்டு உதாரணங்களை இங்கே சொல்லுகிறார்.

1. புடமிடப்படுகிற பொன்னும் வெள்ளியும்.
2. வண்ணானுடைய சவுக்காரம்.

## புடமிடப்படுகிற பொன்னும் வெள்ளியும்

பொன்னும்,வெள்ளியும் புடமிடப்படுவதற்காக அக்கினியில் போடப்படும். இதன் மூலமாய் அதிலுள்ள எல்லா அழுக்குகளும் அகலும் அதைப் போடவேண்டும். இதைப் பற்றி அறிந்தவர்களுக்குத் தெரியும். அது எத்தனை கடுமையான காரியம் என்று.

அந்தப் பொன்னையோ,வெள்ளியையோ அதிக நேரம் நெருப்பில் வைத்துவிட்டால், அந்த உலோகம் தன் தன்மையை இழந்து உடையக்கூடிய உலோகமாக மாறிவிடும். முந்தி எடுத்துவிட்டால் அது சரியாகப் பயன்படுத்தமுடியாது. ஆதைச் செய்கிற ஆசாரி அந்த நெருப்பிலெ உட்கார்ந்து அதையே பார்த்துக்கொண்டிருப்பான். தன்னுடைய முகம் தெளிவாகத் தெரிந்தவுடன் அதை எடுத்துவிடுவான்.

இதைப்போல நமது தேவனாகிய கர்த்தரும் நம்மைப் புடமிடுவார். நமது வாழ்வில் கிறிஸ்துவைப்போல் பிரதிபலிக்குமட்டும் நாம் சுத்திகரிக்கப்படுவோம். பின்பு அவருடைய மகிமையோடு சேர்ந்திருப்போம்.

ஆனால் இப்படி நாம் புடமிடப்படுகையில் தேவனும் நம்முடனே கூட அதே அக்கினியில் அமர்ந்திருப்பார். அவருடைய திவ்விய பிரசன்னம்

நமக்கு ஆறுதலையும்,தேறுதலையும்,சமாதானத்தையும் கொடுத்து வழி நடத்தும்.

1கொரிந்தியர் 3:12 சொல்லுகிறது நம்முடைய கிரியைகளெல்லாம் அக்கினியினால் பரிசோதிக்கப்படும் என்று.

## வண்ணானுடைய சவுக்காரம்

சவுக்காரம்(சோப்) என்பது நாம் வெளியே அணியக்கூடிய ஆடையை சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. இது நமது வெளியான வாழ்க்கையை குறிக்கிறது.நமது உடை நமது நீதியைக் குறிக்கின்றது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மலையின்மேல் மறுரூபமான காட்சியைப்பற்றி குறிப்பிடும்போது இதேபதம் அங்கே உபயோகப்படுகிறது.

மாற்கு 9:3, ***அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல் பூமியிலே எந்த*** ***<u>வண்ணானும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது.</u>***

ஆனாலும் இந்த மக்கள் வெளியரங்கமாகவும் உள்ளரங்கமாகவும் மாறவில்லை. தங்களுடைய வயல் வெளிகளில் வேலைசெய்வதற்கு ஆட்களை வேலைக்கு வைப்பார்கள்.ஆனால்,அவர்களுக்க அதற்குண்டான கூலியைக் கொடுப்பதில்லை. அவர்களோடு மிகவும் கொடுமையாக நடந்தார்கள். ஆகவே தேவன் மனந்திரும்பி என்னிடத்தில் வாருங்கள் என்று சொல்கிறார்.பல நூற்றாண்டுகளாக இதுவே தேவனுடைய உள்ளார்ந்த வேண்டுகோளாக இருந்தது.(எரே 31:18,புல 5:21,சங் 85:4)

அவர்கள் தேவனிடத்தில் கேட்கும் கேள்வியின் தோரணையைக் கவனியுங்கள்!எந்தவிதத்தில்?

ஏதோ ஆண்டவர் சொன்னால் கேட்டு நடப்பவர்கள் போல!

இப்போதும் தேவன் உங்களை நோக்கி இதே கேள்வியைக் கேட்டால் உங்களுடைய பதில் என்னவாக இருக்கும்!

சற்று சிந்தியுங்கள்!!

சேலா!

## 6. எதிலே உம்மை வஞ்சித்தோம்?' (3:8)

கிறிஸ்தவத்தில் மிகவும் தவறாகப் புரிந்துகொண்டு பிரசங்கிக்கக்கூடிய ஒரு கருப்பொருள் தசமபாகம்!

**மல்கியா** 3:10, ***என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் <u>தசமபாகங்களையெல்லாம்</u> பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.***

தசமபாகம் என்பது பழைய உடன்படிக்கையில் உள்ளதாகும்.தசமபாகம் என்றுகுறிப்பிடாமல் மேலே உள்ள வசனத்தில் தசமபாகங்களையெல்லாம். என்பதன்மூலமாய் இது பன்மை என்பது உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும். என்று விசுவாசிக்கிறேன். இதைக் குறித்து இன்றைக்கு தவறாகப் பிரசங்கம் செய்து சம்பாதிக்கிற சில ஊழியக்காரர்கள் உண்டு.பழைய உடன்படிக்கையிலே <u>மூன்று தசமபாகங்கள் உண்டு</u>.

1. ஆசாரியனுக்கான தசமபாகம்
2. ஆலயம் மற்றும் பண்டிகைக்கான தசமபாகம்
3. ஏழைகள் விதவைகளுக்கான தசமபாகம்

ஆக மொத்தம் ஒரு வருடத்தில் 23.3% தசமபாகம் மற்றும் ஆலயவரி ஒருவர் கண்டிப்பாக பழைய உடன்படிக்கையில் செலுத்தவேண்டும்.

அவைகளைக்குறித்து சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

## 1.ஆசாரியனுக்கான தசமபாகம்

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியிலே இஸ்ரவேல் மக்கள் தாங்கள் கோத்திரங்களாய் இடங்களை எடுத்துக்கொண்ட போது லேவியர் கோத்திரத்துக்கு ஒரு சொத்தும் கோடுக்கப்படவில்லை காரணம் அவர்கள் தேவனுக்காய் பிரித்தெடுத்து வைக்கப்பட்டதினால் தேவனே அவர்கள் சொத்து. ஆகையால் தேவன் மற்ற கோத்திரத்தில் உள்ள மக்கள் லேவியருக்கு தங்களுடையவைகளில் தசமபாகத்தைக் கொடுக்க அவர் கட்டளையிட்டார்.

யோசுவா13:33, **லேவிகோத்திரத்திற்கு மோசே சுதந்தரம் கொடுக்கவில்லை**, **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறபடி**, **அவரே அவர்களுடைய சுதந்தரம்.**

எண்ணாகமம் 18:21, **இதோ**, **லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக**, **இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்**.

எண்ணாகமம் 18:26, **நீ லேவியரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்**: **இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கிக்கொள்ளும்படி நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கையில் வாங்கும்போது**, **தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தருக்கு ஏறெடுத்துப்படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும்**.

## 2. ஆலயம் மற்றும் பண்டிகைக்கான தசமபாகம்

இஸ்ரவேல் தேச மக்கள் வருடத்தில் மூன்று முறை அவர்கள் எருசலேம் தேவாலயத்திற்கு வந்து ஆண்டவரை ஆராதனை செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார்.அதற்கான தசமபாகமே இது.

**உபாகமம்** 16:16-17, ***வருஷத்தில் மூன்றுதரம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும்***, ***வாரங்களின் பண்டிகையிலும்***, ***கூடாரப்பண்டிகையிலும்***, ***உன் ஆண்மக்கள் எல்லாரும் உன்***

*தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள். 17. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக, அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன்.*

**உபாகமம்** 14: 22-27, ***நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து,*** *23.* ***உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியில் புசிப்பாயாக.*** *24.* ***உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும் காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்ட ஸ்தானம் உனக்கு வெகு தூரமாயிருக்கிறதினால், வழிப்பிரயாணத்தின் வெகு தொலையினிமித்தம், நீ அதைக் கொண்டுபோகக் கூடாதிருக்குமானால்,*** *25.* ***அதைப் பணமாக்கி, பணமுடிப்பை உன் கையிலே பிடித்துக்கொண்டு, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்குப் போய்,*** *26.* ***அங்கே உன் இஷ்டப்படி ஆடுமாடு, திராட்சரசம், மதுபானம் முதலான சகலத்தையும் பணம்கொடுத்து வாங்கி, உன் தேவனாகிய கர்த்தருடையசந்நிதியில், நீயும் உன் குடும்பத்தாரும் உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் புசித்துச் சந்தோஷப்படுவீர்களாக.*** *27.* ***லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியால் அவனைக் கைவிடாயாக.***

ஆகவே மேலே உள்ள வசனங்களின் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். இந்த தசமபாகம் அவர்கள் எல்லோரும் எருசலேம் வந்து தங்கி ஆண்டவரைத் தொழுதுகொண்டு சாப்பிடுவதற்கு உபயோகப்பட்டது. ஏன்னென்றால் அவர்கள் மூன்று முறை எருசலேம் வருவதற்கு தங்களுடைய வேலையை விட்டுவிட்டு வரவேண்டும் என்பதால் தேவனுக்கு முன்பாக பண்டிகை கொண்டாடுவதற்கு இது தேவையாக இருந்தது.

## 3.ஏழைகளுக்கான தசமபாகம்

முந்திய இரண்டு தசமபாகங்களும் ஆண்டுக்கு ஒரு முறை செலுத்தவேண்டும்.ஆனால் இந்த தசமபாகம் மூன்று ஆண்டுக்கொருமுறை செலுத்தவேண்டும்.

**உபாகமம்** 14:28, ***<u>மூன்றாம் வருஷத்தின் முடிவிலே</u> அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய்.***

**உபாகமம்** 26:12, ***தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்தபின்பு,***

இந்த தசமபாகத்தை தங்களுடைய ஊரில் சேர்த்துவைத்து அதை ஏழைகளுக்கு,விதவைகளுக்கு,அனாதைகளுக்குகொடுக்கக்கட்டளையிட்டார்

புதிய உடன்படிக்கையில் நாம் எப்படி தசமபாகம் செலுத்தவேண்டும?

இந்தச் சட்டங்களை அல்லது கற்பனையைக் கைக்கொள்ளவேண்டும் என்று எங்கும் கூறப்படவிலிலை.புதிய உடன்படிக்கையில் எத்தனை சதவீதம் என்று குறிப்பிடாமல் தங்களுடைய வருமானத்துக்கு ஏற்ற வண்ணம் கொடுக்கவேண்டும் என்ற ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

1கொரிந்தியர்16:2, ***நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.***

எனவே புதிய உடன்படிக்கையில் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று சொல்லாமல் எப்படிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகின்றது. நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை புரிந்து கொண்டவரானால்

நிச்சயம் 10% மேலாகக் கொடுப்பவராக இருப்பீர்கள். புதிய உடன்படிக்கையில் 100% கர்த்தருக்கே சொந்தம்.ஆம் இதைப் புரிந்து கொண்டு நாம் செய்யும் எல்லாச் செலவுகளையும் கவனமாகச் செலவழிக்க கற்றுக்கொள்ளவேண்டம்.

1கொரிந்தியர் 4:7, ***அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? <u>உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது?</u> நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?***

நாம் பெற்றுக்கொண்ட எல்லாம் தேவனின் கரத்திலிருந்து வந்தது என்பதால் நாம் அதை சரியான முறையில் நிர்வகிக்க வேண்டும்.
இயேசு கிறிஸ்து கொடுப்பதைக் குறித்து என்ன கூறினார்?

மாற்கு12: 41-44, ***இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப்பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். 42. ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். 43. அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப்பெட்டியில் பணம்போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; 44. அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்."***

நான் இன்றும் விசுவாசிக்கிறேன். இயேசுவானவர் இன்றைக்கும் நம்முடைய தேவாலயத்தில் காணிக்கைப் பெட்டியருகேதான் அமர்ந்திருந்து நாம் எப்படிக் கொடுக்கிறோம் என்பதைத்தான் பார்க்கிறார். எவ்வளவு கொடுக்கிறோம் என்று அல்ல.

2 கொரிந்தியர் 9:6-7, ***பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், <u>பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்</u>. 7. அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில்***

***நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.***."

ஆகவே சந்தோசத்தோடும்,உற்சாகத்தோடும் காணிக்கை செலுத்துங்கள். பரிசுத்த ஆவியானவரின் சத்தம்கேட்டு எங்கு கொடுக்கச் சொல்கிறாரோ அங்கே கொடுங்கள்.தேவனுடைய காரியங்கள் நடைபெறுவதற்கு நீங்கள் கொடுக்க வேண்டும்.

WCF (உலக கிறிஸ்தவ ஐக்கியம்) என்கிறதான நமது சபையில் எப்போதும் நாம் எவரிடமிருந்தும் தேவனைத் தவித்து, நாம் காணிக்கை கேட்பதில்லை. இன்று மட்டும் நமது சபையின் சார்பாக எந்த ஊழியத் தேவைக்கு பணமோ பொருளோ கேட்கவில்லை. கேட்கவும் மாட்டோம். அப்படி யாராவது கேட்டால் அவர்கள் எங்களிடம் இருந்து வந்தவர்கள் அல்ல. தேவன் அவருடைய ஊழியத்திற்கான எல்லாத் தேவைகளையும் சந்திப்பார்,என்ற நிச்சயம் எங்களுக்குண்டு.

மீன்டும் மல்கியாவிற்கு வருவோம். அந்தக் காலத்தில் அவர்களுக்கத் தேவன் எப்படி எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதை கேட்டும் கடைப்பிடிக்காமல் தேவனை ஏமாற்றிவிட்டார்கள். தேவன் என்னை வஞ்சித்துவிட்டீர்கள் என்று சொன்னபோது அவர்களுடைய திமிரைப் பாருங்கள். நாங்கள் உம்மை எங்கே வஞ்சித்தோம் என்று எதிர் கேள்வி கேட்கிறார்கள்.

## 7. ‘உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம் ?’ (3:13)

இஸ்ரவேல் தேச மக்கள் தங்களுக்குள் பேசிக்கோண்ட விசயம் என்ன என்றால்

- தேவனுக்கு ஆராதனை செய்து என்ன பயன்?
- தேவனுக்கு ஏன் சேவை செய்ய வேண்டும்?
- தேவாலயத்திற்கு செல்வதால் எனக்கு என்ன பயன்?
- நாம் ஏன் தசமபாகம் செலுத்தவேண்டும்?
- நமக்கு என்ன நன்மை கிடைத்தது?
- நமக்கு எல்லாம் சரியாகச் செல்லும்போது தேவன் எதற்கு?
- தேவனுடைய கற்பனைகளையெல்லாம் நாம் ஏன் கைக்கொள்ளவேண்டும்?

இந்தக் கேள்விகளை எல்லாம் கேட்கும்போது நமது காலத்தில் நமது மத்தியில் சிலர் கூறும் சொற்கள்போல் உள்ளது அல்லவா?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திரும்ப வருவேன் என்று சொல்லி இன்று 2014 வருடங்கள் சென்றுவிட்டன.அவர் வருவாரோ? இல்லையோ?

நாம் நமது வாழ்வை வாழ்வோம் என்பதற்காக பலர் வாழ்வதைப் பார்க்கிறோம்.உங்களை சிறிதுநேரம் மீண்டுமாய் சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டுகிறேன்.

- .இஸ்ரவேல் தேச மக்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் தொடர்ந்து பாவங்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

- தேவன் தனது தீர்க்கதரிசிகளின் மூலமாய் தொடர்ந்து பேசினாலும் அவர்கள் அவருக்கு செவி கொடுக்காமல் பேசினதினால் தேவன் அவர்கள் மேல் பஞ்சத்தையும்,ஏழ்மையையும் அனுப்பினார்.

- .அவர்கள் மேலும் தொடர்ந்ததினால் அவர்களை முதலில் சிரியா படையெடுத்து பின்பு பாபிலோனியர்கள் அவர்களை சிறைப்படுத்தி ஆலயத்தையும் நகரத்தையும் இடித்துப் போட்டார்கள்.

- தேவன் தமக்காய் வைராக்கியம் கொண்ட சிறு கூட்டத்தின் மூலம் அவர்களை திரும்ப அழைத்துவந்து அவர்களை மீண்டும் தங்களுடைய சொந்த நாட்டில் நிலைநாட்டினார்.எஸ்ரா மற்றும் நெகேமியா புஸ்தகங்களில் இதைக் காணலாம்.

- ஒரு 30 வருடங்கள் கழித்த பின்பு மீண்டும் அவர்கள் தேவனுக்கெதிராய் செயல்பட ஆரம்பிக்கிறார்கள்.

இப்போது அவர்கள் தேவனுக்கெதிராய் பேச எத்தனிக்கிறார்கள். இது எப்படி நடக்கக்கூடும்?எப்படி அவர்கள் தேவன் செய்த இந்த அருமையான காரியத்தை மறந்து அவர்களால் வாழமுடியும்?எப்படி இந்த அன்பும் கரிசனையும் கொண்ட தேவனை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்கள் அவருக்கெதிராய் பேச முடிகிறது?

நமது நாட்களில் நம்மைக் குறித்து இரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்!

1.பாவத்தில் மரித்திருந்து பாதாளம் நோக்கி நாம் சென்று கொண்டிருந்தபோது தேவ அன்பு நமக்கு வெளிப்பட்டது.

2.தேவனை ஏற்றுக் கொண்டபோது நமது இருதயத்தில் ஒரு மகிழ்ச்சியும், சந்தோஷமும் உண்டானது.

தேவனுக்காய் வாழ்வேன். அவருடைய அன்பு ஒன்றே போதும்,என்று தொடங்கிய அந்த நாட்கள் எங்கே?

3.நம்முடைய அன்றாட வாழ்வில் ஏற்படும் காரியத்தில் நேரத்தைச் செலவு செய்து விட்டு இப்போது நம்மில் சிலர் அவர்களைப்போல் கேள்விகளைக் கேட்பதில்லையா?

4.எல்லோருக்குமே ஒன்றுதான். எல்லோருக்கும் எல்லாம்தான் நடக்கும் என்றதான பேச்சு எதைக் காட்டுகிறது?

இன்றைக்கு மல்கியா மூலம் தேவன் அவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டார்.இப்போது அவர்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

சற்று சிந்தியுங்கள்!

**மல்கியா** 3:16 ***அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக்கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.***

தேவன் சொல்கிறார்.அங்கே ஒரு ஞாபகப்புஸ்தகம் ஒன்று எழுதப்படுகிறது என்று.கடைசி நாளிலே நீதிமானுக்கும், அக்கிரமக்காரனுக்கும் வித்தியாசம் காடடும் வண்ணம். அதிலே இருந்து வாசித்து நியாயந்தீர்க்கப்படும் என்று கூறுகிறது.

யாத் 32:32, ***ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்.."***

சங் 69:28, ***ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள்பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக; நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக.***

**தானியேல்** 7:10 ***அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.***

லூக் 10:20, ***ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்."***

வெளி 20:12, ***மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.***

முடிவுரை

4ம் அதிகாரத்தில் முடிவுரையாக தேவன் தன்னுடைய எலியாவை கடைசி நாளில் அனுப்புவேன் என்று உரைக்கிறார்.

**மத்தேயு** 11:13-15, ***நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு.*** *14.* ***நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய <u>எலியா இவன்தான்</u>.*** *15.* ***கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்.***

ஆனால் அவர்கள் கேட்க மறுத்துவிட்டார்கள்.

**மத்தேயு** 17:11, ***இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்.*** *12.* ***ஆனாலும், <u>எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்</u>; <u>அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்</u>; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார்.***

கர்த்தர் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டார்.

இப்போது மல்கியா தீர்க்கதரிசனம் உரைத்த நாளில் இருந்த சபையும் இந்த நாளில் உள்ள நமது சபையையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

பாபிலோனிய ஆதிக்கத்தின் கீழ் சிறைப்பட்டு இருந்த மக்களை மீட்டு சொந்த நாட்டிற்கு திரும்பக் கொண்டுவந்து அவர்களை ஆசீர்வதித்து நகரத்தின் கோட்டை எழுப்பப்பட்டு ஆலயம் கட்டிய பின்பு சுகமாய்

அவர்கள் வாழும்போது அவர்கள் வெதுவெதுப்பாய் மாறி தேவன் மீதும் குற்றம் சுமத்தி அவரை கேள்வி கேட்பவர்களாய் மாறிவிட்டனர்.

கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்றி தன்னுடைய குமாரனாகிய இயேசுவை சிலுவையில் மரிக்கப்பண்ணி அதன் மூலமாய் நம்மை மீட்டு எடுத்து நம்மை மறுபடியும் ஆவியில் பிறக்கச்செய்துவிட்டார்.அவருடைய பிரசன்னத்தில் அவருடைய பரிசுத்த ஆவியினால் சந்தோசத்தோடு அவருடைய மகிமையின் கீழ் வாழத்தொடங்கிய நாம் நாளடைவில் சிறிது சிறிதாக வெதுவெதப்பாக கிறிஸ்தவர்களாய் மாறி விடுகின்ற சூழ்நிலை.இன்றைய நாட்களில் தேவனடைய வார்த்தையின்படி நடப்பவர்கள் மிகவும் அரிதாகிக் கொண்டேவருகிறது. சில நாடுகளில் அதைப் பிரசங்கிப்பதே மிகவும் கடினமாக்கப்பட்டுவிட்டது.

பழைய உடன்படிக்கையில உள்ள கடைசி சபைக்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தைக் குறித்து விரிவாகப் பார்த்தோம்.

புதிய உடன்படிக்கையில் உள்ள கடைசி திருசபைக்கு தேவன் உரைத்த தீர்க்கதரிசனத்தை நாம் சற்றுப் பார்ப்போம்.

வெளிப்படுத்தின விசேஷம் 3:14-22ல் லவோதிக்கேயா திருச்சபையும் மல்கியா தீர்க்கதரிசன சபைக்கும் நிறைய ஒற்றுமைகளைக் காணலாம்.

- தங்களைப்பற்றி அறியாதவர்கள்.
- வெதுவெதுப்பானவர்கள்.
- தேவன் சபைக்குவெளியே இருந்து தட்டுகிறார்.
- சூனியை உங்கள்மேல் எறிவேன்.வாந்திபண்ணிப்போடுவேன்.
- வசதியுடன் வாழ்க்கை.
- அரங்கம் கட்டப்பட்டு செல்வத்துடன் வாழ்க்கை.
- தேவன் இல்லாத ஆலயத்தில் மிகவும் ஆரவாரமான ஆராதனை.
- பரிதாபத்துக்குரியவர்கள்.
- ஏழை.
- குருடர்கள்.
- நிர்வாணமானவர்கள்.

வெளி 3:18, ***நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு <u>நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும்</u>, உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு <u>வெண்வஸ்திரங்களையும்</u> என்னிடத்திலே***

***வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.***

மல்கியா தீர்க்கதரிசனத்தில் புடமிடப்படுகின்ற பொன்னும்,வெள்ளை அங்கியும் குறிப்பிடப்படுகிறது.

**மல்கியா** 3: 2, ***ஆனாலும் அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் <u>புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும்</u> இருப்பார்.***

தேவன் மல்கியா மூலம் கொடுத்த அந்த கடினமான திருத்தத்தை கிறிஸ்து லவோதிக்கெயா சபைக்குக் கொடுக்கிறார்.

வெளி 3:19 & 21, ***நான் <u>நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்;</u> ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.***

*21.* ***நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.***

**மல்கியா** 3:17, ***என் சம்பத்தை நான் சேர்க்கும் அந்நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற <u>தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்</u>.***

உங்களால் பழைய மற்றும் புதிய உடன்படிக்கையில் உள்ள கடைசி சபைக்கு தேவன் கொடுத்த செய்தியில் உள்ள ஒற்றமையை காணமுடிகிறதா?

ஏவ்வாறு நீங்கள் இப்போது இதை ஏற்றக்கொள்ளப் போகிறீர்கள்?

உங்களுடைய வாழ்விலுள்ள வெதுவெதுப்பானவைகளை ஒதுக்கிவைக்க தயாரா?

தேவனோடு வந்து அவருடைய பிரசன்னத்தில் வாழ அழைக்கிறேன்!

இறுதியாக இப்படிமுடிக்க விரும்புகின்றேன்.

வெளி 3:22, "***ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.***